IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.196/2024

dated : 10.02.2026

P.W. 1

Name சுடலைமுத்து

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரதிவாதி என் உறவினர் அல்ல. நானும், பிரதிவாதியும் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். இருவரும் ஒரே தெருவில் குடியிருந்து வருகிறோம். அவரை வியாபார ரீதியாக 10 ஆண்டுகளாக பழக்கம். பிரதிவாதி மொத்த கொள்முதல் முட்டை வியாபாரம் செய்து வருகிறார். அதனால் பிரதிவாதி அடிக்கடி கடன் பெறுவார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னிடம் வாங்குவதில்லை. நான் பொட்டல்புதூரில் புத்தகம், மிட்டாய் போன்றவைகளை மொத்தமாக வாங்கி விற்பனை செய்து வருகிறேன். ஏஜென்ஸி தொழில் செய்யவில்லை. வழக்குரைச் சொத்து குடியிருப்பு வீடு என்றால் சரிதான். அது முன்னதாக பிரதிவாதியின் தந்தைக்கு பாத்தியப்பட்டது. அவரது வாரிசுகள் பிரதிவாதிக்கு தங்களது பங்கை நன்கொடையாக கொடுத்துள்ளார்கள். நன்கொடை கொடுத்த விபரம் நேரில் தெரியாது ஆவணத்தை பார்த்து தெரிந்து கொண்டேன். நன்கொடை ஆவணத்தில் காலிமனையாக மேற்படி இடம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2

ஆவணத்தில் வீடு இருப்பதாக கூறப்படவில்லை என்றால் சரிதான். எனவே தன்பின்னர்தான் வீடு கட்டடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி தனது சொந்த பணத்தைக் கொண்டு அவ்வாறு வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அவர் சுமார் ரூ.15,00,000/- செலவு செய்து வீடு கட்டியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவரே மின் இணைப்பும், குடிநீர் இணைப்பும் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ-3 ஆவணத்தின் அடிப்படையில் பிரதிவாதி எனக்கு கிரையம் கொடுத்துள்ளார். நான் பிரதிவாதியை ஏமாற்றி மோசடியாக எழுதிப் பெற்றுள்ளேன் என்றும் அது கடனுக்காக எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. அது கடனுக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் என்றும் அதனால் கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.823/2024 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் கிரையம் பெறும்முன்பு வில்லங்க சான்று பெற்று பார்த்தேன். முன்னதாக அவர் நிதிநிறுவனத்தில் இரண்டுமுறை கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த இரண்டு கடன்களும் தீர்க்கப்பட்ட நிலையில் இருந்தது. மேற்படி அடைமான ஆவணங்களையும் தீர்க்கப்பட்ட இரசீதையும் என்னிடம் ஒப்படைக்கவில்லை. நான் வா.சா.ஆ-3 அசல் ஆவணத்தை ரூ.13,00,000/-ற்கு அடைமானம் வைத்து கடன் பெற்றுள்ளேன். நான் அரசுடமையாக்கப்பட்ட வங்கியில் அடைமானம் வைக்கவில்லை தனியார் வங்கியில் அடைமானம் வைத்துள்ளேன். பொதுவாக சொத்து மதிப்பைவிட பாதி அளவிற்குதான் அடைமானக் கடன் வழங்கப்படும்

என்றால் சரிதான். வா.சா.ஆ.3 கிரைய ஆவணம் ஏற்பட்ட காலத்தில் நான் வாடகை வீட்டில் குடியிருந்தேன். கிரைய ஆவணம் ஏற்பட்டபோது என்னிடம் சாவியை ஒப்படைத்தார்கள் அவர்கள் கேட்டுக்கொண்டதால் திரும்ப ஒப்படைத்தேன். வாங்கிய உடனேயே திரும்ப கொடுத்துவிட்டேன். மகள் திருமணம் முடிந்தவுடன் காலி செய்துவிடுகிறேன் என்று சொன்னதால் திரும்ப ஒப்படைத்தேன். அதற்கு எழுத்துமூலமான ஆவணங்கள் இல்லை. 2020 ம் ஆண்டு பிரதிவாதி மகளுக்கு திருமணமானது. வா.சா.ஆ.3 ஆவணம் பதிவு செய்யப்படுவதற்கு முன்பே திருமணம் ஆகிவிட்டது என்றால் சரியல்ல. திருமணமான பின்னர் நான் நேரில் சென்று வீட்டை காலி செய்து தரும்படி கேட்டேன். நான் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பவில்லை. வா.சா.ஆ.3 ஏற்பட்ட நாள் முதல் 10.05.2023 வரை நான் வீட்டு வரியை என் பெயருக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நடவடிக்கை எடுத்தேன் என்பதற்கு நான் மனு கொடுத்த ஆவணங்கள் பஞ்சாயத்தில் உள்ளது அதற்கான நகல் எதுவும் என்வசம் இல்லை. நான் எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.3 கடனுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்றும் கிரைய ஆவணமாக எழுதிக் கொடுக்கப்படவில்லை என்றும் எனவே ஒவ்வொரு மாதமும் பிரதிவாதிக்கு கொடுத்த கடனுக்கு தவறாமல் வட்டி கொடுத்து வந்தார் என்றும் 10.05.2023 அன்று முழுத் தொகையையும் வட்டியுடன் சேர்த்து செலுத்திவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு முழுத் தொகையையும் செலுத்திவிட்டு வா.சா.ஆ.3 ஆவணத்தை இரத்து செய்து தரும்படி கேட்டபோது நான் தர

மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அதன்பின்னரே என் பெயருக்கு வீட்டு வரி இரசீதை மாற்ற நடவடிக்கை மேற்கொண்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் பிரதிவாதியின் குடும்ப உறுப்பினர்களுக்கு தெரியும். வழக்குரைச் சொத்து வழக்கு தாக்கல் செய்யும் நாளில் ரூ.20,00,000/-ற்கு மேல் மதிப்பு கொண்ட சொத்து என்றால் சரியல்ல அதனை நான் குறைத்து மதிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 சட்டப்படி செல்லாத ஆவணம் என்றும் எனவே அதனடிப்படையிலேயே தொடரப்பட்ட வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.10 17:14:14 +0530